# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 173 | சனிக்கிழமை Saturday | 19.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# மாணவர்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த காலை உணவு

## அதிகாரிகளுக்கு முதலமைச்சர் விஜய் அறிவுறுத்தல்



சென்னை: பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின்கீழ்,மாணாக்கர்கள் அனைவருக்கும் சூடான, சுவையான, உரிய அளவிலான, ஊட்டச்சத்து மிகுந்த உணவு வழங்கப்பட வேண்டும் என்றும், இத்திட்டத்துக்கான பணியாற்றும் அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்என்று முதல்வர் விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் முதல்வர் விஜய் தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று (செப்.18) நடைபெற்றது.

தமிழகத்தில் பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும், பசியின்றி மாணவ, மாணவியர்கள் பள்ளிக்கு வருவதை உறுதி செய்து, கல்வியில் முழுமையான கவனம் செலுத்திடவும் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல்வர் விஜய் தலைமையில் கடந்த 15.06.2026 அன்று நடைபெற்ற சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தின்போது, காலை உணவுத் திட்டத்தை 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ,மாணவியருக்கு விரிவாக்கம் செய்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இத்திட்ட விரிவாக்கத்தின் மூலம், 15,454 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 15.30 லட்சம் மாணவ,மாணவியர்கள், கூடுதலாகப் பயன்பெறுவர். இதற்கென நடப்பு நிதியாண்டில் கூடுதலாக 217 கோடியே 63 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒட்டுமொத்தமாக 724 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 447 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகத்தாலும், இதர மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும்அதனைஒட்டியுள்ள பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள 2,150 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் மூலமாக நகராட்சிநிர்வாகஇயக்குநரகத்தாலும் காலை உணவு வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளை ஒட்டியுள்ள பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள 12,857 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்நாடு மகளிர்மேம்பாட்டு நிறுவனம் மூலமாக சுய உதவிக் குழு உறுப்பினர்களால் அந்தந்தப் பள்ளியிலேயே காலை உணவு தயாரித்து வழங்கப்படும்.

மாணவர்களின் உடல் நலம், ஊட்டச்சத்து, பள்ளி வருகை, கற்றல் ஆகிய அம்சங்களை ஒருங்கிணைத்து, பள்ளிக் கல்வியின் அடித்தளத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படுகிறது. இதனை முதல்வர் விஜய் வரும் 22-ம் தேதி சென்னையில் தொடங்கி வைக்கவுள்ளார். தொடக்கப்பள்ளி மாணவர்களைத் தொடர்ந்து நடுநிலைப்பள்ளிமாணவர்களையும் உள்ளடக்கும் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கம், மாணவர்களின் கல்விப் பயணத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் பெரும் துணையாக அமையும். இக்கூட்டத்தில் முதல்வர் விஜய், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை செயல்படுத்திடும் சமையல் கூடங்கள் மற்றும் உணவு பரிமாறும் இடங்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.மாணாக்கர்கள் அனைவருக்கும் சூடான, சுவையான, உரிய அளவிலான, ஊட்டச்சத்து மிகுந்த உணவு வழங்கப்பட வேண்டுமென்றும், இத்திட்டத்தில் பணியாற்றும் அனைத்துத் துறை அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை ஒருங்கிணைந்து செவ்வனே செய்திட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் ந. ஆனந்த், பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கு. ஜெகதீஸ்வரி, தலைமைச் செயலாளர் முனைவர் மு.சாய்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு:

# மம்தா, ரிதப்ரதா தரப்புகளுக்கு தனித்தனி கட்சிப் பெயர், சின்னம் ஒதுக்கீடு



அகில இந்திய திரிணமூல் காங்கிரஸின் இரண்டு பிரிவுகளுக்கும் தனித்தனி கட்சிப் பெயரும், தனித்தனி தேர்தல் சின்னமும் தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், அகில இந்திய திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்குஉரிமைகோரும் இரு பிரிவுகளுக்கும் தற்காலிகமாக இரண்டு தனித்தனி பெயர்கள் ஒதுக்கப்படுகின்றன. அதன்படி, மம்தா பானர்ஜி தலைமையிலான பிரிவுக்கு மம்தா அகிலஇந்தியதிரிணமூல் காங்கிரஸ் என்ற பெயரும், ரிதப்ரதா பானர்ஜி தலைமையிலான பிரிவுக்கு ஜனநாயகதிரிணமூல் காங்கிரஸ் என்ற பெயரும் ஒதுக்கப்படுகிறது.இதேபோல், மம்தா அகிலஇந்தியதிரிணமூல் காங்கிரஸுக்கு கால்பந்து வீரர் சின்னமும்,ஜனநாயக திரிணமூல் காங்கிரஸுக்கு உறை (Envelope) சின்னமும் ஒதுக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. நடந்து முடிந்த மேற்கு வங்கச் சட்டமன்றத் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, கட்சியின் தலைமைக்கு எதிராக உள்கட்சி போராட்டம் வெடித்தது. சட்டமன்ற உறுப்பினர் ரிதப்ரதா பானர்ஜி தலைமையில் சுமார்60எம்எல்ஏ-க்கள் ஒன்றிணைந்து, தாங்களே உண்மையான திரிணமூல் காங்கிரஸ் என கூறி, தங்கள் தரப்புக்கேஎதிர்க்கட்சிதலைவர் பதவி ஒதுக்கப்பட வேண்டும்என்று கோரினர். கோரிக்கையை ஏற்று மேற்கு வங்க சபாநாயகர்,ரிதப்ரதா பானர்ஜியை எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரித்தார்.அதனைத் ரிதப்ரதா பானர்ஜி தலைமையிலான பிரிவினர், கடந்த ஜூன் மாத இறுதியில் மம்தா பானர்ஜியைத் தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டு அருப்ராயை புதிய தலைவராக அறிவித்தனர். நந்திகிராம் மற்றும் ரெஜிநகர் தொகுதிகளுக்கு அக்டோபர் 6-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தேர்தல்ஆணையத்திடம் இருபிரிவினரும்திரிணமூல் கட்சியின் பெயர் மற்றும் சின்னத்துக்கு உரிமை கோரினர். பரிசீலித்த தேர்தல் ஆணையம், மம்தா பானர்ஜி தலைமையிலானபிரிவோ அல்லது ரிதப்ரதா பானர்ஜி தலைமையிலான பிரிவோ அகில இந்திய திரிணமூல் காங்கிரஸ் என்ற பெயரையோ அதன் சின்னத்தையோ பயன்படுத்தக் கூடாது என உத்தரவிட்டது.செப்டம்பர் 18 காலை 11 மணிக்குள் இரு தரப்பும் தங்களின் புதிய அமைப்புகளுக்கான மூன்று மாற்றுப் பெயர்கள் மற்றும் மூன்று சுயேச்சை சின்னங்களின் விருப்பப் பட்டியலைச்சமர்ப்பிக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டது. அதன்படி, இரு தரப்பும் புதிய கட்சிப் பெயர்கள் மற்றும் சின்னங்கள் குறித்த விருப்பப் பட்டியலை சமர்ப்பித்தன. தேர்தல் ஆணையம் இரு பிரிவுகளுக்கும் தற்காலிகமாக புதிய கட்சிப் பெயர் சின்னத்தை ஒதுக்கியது.

## தமிழகம் முழுவதும் வேகமாக பரவும்

# டெங்கு காய்ச்சல்; ஒரே நாளில் 244 பேர் பாதிப்பு




தமிழகத்தில் சென்னை, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் டெங்கு பாதிப்பு அதிகளவில் உள்ளது. வெயில் மற்றும் மழை என காலநிலை மாற்றத்தால், டெங்குவை பரப்பும், 'ஏடிஸ்' வகை கொசுக்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக, மாநிலம் முழுவதும் பரவலாக டெங்கு பாதிப்பு உள்ளது.

குறிப்பாக தினசரி, 70 முதல் 100 பேர் வரை டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையை அரசு தீவிரப்படுத்தி உள்ளது. டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரிகள்,மாவட்ட ஆஸ்பத்திரிகளில் சிறப்பு வார்டுகள் அமைக்கப்பட்டு பிரத்யேக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் நேற்று ஒரே நாளில் 244 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் டெங்குவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 16,577ஆக உயர்ந்துள்ளது. டெங்கு பாதிப்பால் இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர். சென்னையில் நேற்று ஒரேநாளில்87பேருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் டெங்கு காய்சல் பாதிப்பு அதிகமாக உள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மேலும் கொசு ஒழிப்பு பணியில் 25,000க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர். காய்ச்சல் ஏற்பட்டால்பொதுமக்கள் மருந்தகங்களுக்குச்சென்று தாங்களாகவே மாத்திரைகளை வாங்கிச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் வீடுகளின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வதன் மூலம் கொசுக்கள் உற்பத்தியாவதைத் தடுத்து.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூரில் த.வெ.க. அலுவலகம் திறப்பு விழா

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட மத்தூர் ஒன்றிய அலுவலகத்தில் வாரத்திற்கு இரண்டு நாட்கள் சந்-



மத்தூர் ஒன்றிய கழக அலுவலகத்தை கிருஷ்ணகிரி த.வெ.க. தென்கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், ஊத்தங்கரைசட்டமன்றஉறுப்பினருமான மருத்துவர் இளையராஜா ரிப்பென் வெட்டியும்குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார் அவர் பேசுகையில் பொதுமக்கள் எந்த நேரத்திலும் தொலைபேசியிலோ அல்லது நேரிலோ தங்களின் குறைகளை தெரிவிக்கலாம். என்றும் மத்தூர் ஒன்றிய பொதுமக்களின் நலன் கருதி தங்களின் குறைகளை கேட்டறிய தித்து தங்கள் பகுதியில் உள்ள பிரச்சினைகளை மனுக்களாகவோ நேரடியாகவோ என்னை சந்தித்து தெரிவிக்கலாம் என்று கூறினார். இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி தென் கிழக்கு மாவட்ட கழக இணை செயலாளர் தாமோதிரன், மாவட்டக் கழக பொருளாளர்

மணிகண்டன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள் சித்திக், கீர்த்தனா,மாவட்டசெயற்குழு உறுப்பினர்கள்

கார்த்திகேயன், சிங்காரவேல், இப்ராஹிம், ஹரிதாஸ், ஹரிஹரன், லோகநாதன், மணிகண்டன், கோவிந்தராஜ், வினோத்குமார், அர்ச்சனா, மத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் திருமூர்த்தி, மத்தூர் மேற்கு ஒன்றியசெயலாளர் சக்தி, மத்தூர் மத்திய ஒன்றிய கழக செயலாளர் சிவா, மத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் விக்னேஷ், ஊத்தங்கரை மத்திய ஒன்றிய கழகசெயலாளர் இராமதுரை, ஊத்தங்கரை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் தினேஷ்கண்ணன், ஊத்தங்கரை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சக்திவேல், ஊத்தங்கரை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் உமாபதி, பேரூர் கழக செயலாளர் ரமேஷ், பேரூர் கழக இணை செயலாளர் இறையன்பு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தீபா தாமோதிரன், உறுப்பினர் சேர்க்கை ஒருங்கிணைப்பாளர் கார்முகில், வேந்தன், கதிர்வேல், இர்பான், சதாம், சௌந்தர பாண்டியன், விக்னேஷ், கருமத்துல்லா, டி. விக்னேஷ், ஜெகன், சுரேஷ், விநாயகமூர்த்தி, பிரசாந்த், சங்கர், பிரவீன், சத்யராணி சக்தி ஆசிரியர் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய, பேரூர் கழக பொறுப்பாளர்கள், சார்பு அமைப்பு நிர்வாகிகள், கிளை கழக பொறுப்பாளர்கள் மகளிரணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# தென்காசி மின் மயானத்தில் அடிப்படை வசதிகள் கோரி பாரதிய ஜனதா கட்சி நகர் மன்ற உறுப்பினர்கள் இணைந்து நகராட்சி ஆணையரிடம் மனு சமர்ப்பிப்பு!



தென்காசிநகராட்சிக்கு உட்பட்ட மின் மயானத்திற்குஇறுதிச்சடங்குகள் செய்ய வரக்கூடிய பொதுமக்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் போதுமான அடிப்படை வசதிகள் இன்றி பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணும் வகையில்,தென்காசிநகராட்சி பாரதிய ஜனதா கட்சி (BJP) நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து, நகராட்சி ஆணையர் அவர்களை நேரில் சந்தித்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிஅமைப்புகள் சட்ட விதிகளின்படி விரிவான கோரிக்கை மனுவைச் சமர்ப்பித்தோம். மனுவில் முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய கோரிக்கைகள்:

* இறுதிச் சடங்குகள் செய்ய வரக்கூடிய பொதுமக்கள் நீராடுவதற்குவசதியாக5 புதியநவீனகுளியலறைகள் அமைத்தல்.

* மயான வளாகத்தில் பொதுமக்களுக்குச் சுத்திகரிக்கப்பட்ட RO குடிநீர் வசதி ஏற்படுத்துதல்.

* இறுதிச் சடங்குகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு மேற்கூரையுடன் கூடிய நன்மை கூடம் அமைத்துத் தருதல். * மயானப் பகுதி முழுவதும் போதுமான உயர் கோபுர மின்விளக்குகள் மற்றும் தொடர்ச்சியான தூய்மைப் பணிகளை உறுதி செய்தல். பொதுமக்களின் நியாயமான இந்த அத்தியாவசிய கோரிக்கைகளை விரைந்து பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக நகராட்சி ஆணையர் அவர்கள் உறுதியளித்து உள்ளார். மக்கள் நலன் காக்கும் மக்கள் பணிகளில் எப்போதும் பாரதிய ஜனதா கட்சி... - பாரதிய ஜனதா கட்சி நகர் மன்ற உறுப்பினர்கள்,

# உத்தமநல்லூர் கிராமத்தில் ஸ்ரீ பொன்னியம்மன், ஸ்ரீ தண்டுமாரியம்மன், ஸ்ரீ செல்லியம்மன் கோயில்களுக்கு ஒரே நேரத்தில் அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் அருகே உத்தமநல்லூர் உள்ள ஸ்ரீ பொன்னியம்மன் ஸ்ரீ தண்டு மாரியம்மன் ஸ்ரீ செல்லியம்மன் இந்த மூன்று கோவில்கள் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. 16 ஆம் தேதி மகா கணபதி ஹோமம் மகாலட்சுமி ஹோமம் செய்து ஹோமங்களுடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது. இதனைத் தொடர்ந்துஇன்றுகாலை இரண்டாம் கால யாகசாலையுடன் தொடங்கியதுஇதனைத்தொடர்ந்து மகா பூர்ணாஷீதி செய்யப்பட்டு யாகசாலையில் இருந்து கலசங்கள் விமான கோபுர கலசத்திற்கு மேளதாளங்கள் முழங்க எடுத்து செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க மேல்மருவத்தூர்ஆன்மீகஇயக்கத் துணைத் தலைவர் செந்தில்குமார் அவர்கள் கோபுர கலசத்தில் புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது இதனைத் தொடர்ந்து ஸ்ரீ பொன்னியம்மன், ஸ்ரீ தண்டு மாரியம்மன், ஸ்ரீ செல்லியம்மன் இந்த மூன்று சுவாமிகளுக்கும் புனித நீர்ஊற்றிகும்பாபிஷேகம் விழா வெகு விமர்சியாக நடைபெற்றது புனித நீரை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மீது தெளித்தனர் இந்த கும்பாபிஷேக விழாவில் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து பல்லாயிரம் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



சேலம் மாவட்டம் ஓமலூர் பேருந்து நிலையத்தில் தமிழக வெற்றி கழகம் சார்பில் பெரியார் 148வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவிக்கும் மரியாதை செலுத்தப்பட்டது.

# பிரதமர் மோடி பிறந்தநாள் விழா: தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாஜக சார்பில் கோவிலில் சிறப்பு பிரார்த்தனை!



பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாவட்டம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் விமரிசையாக நடைபெற்றது.

தூத்துக்குடியில் தெற்கு மாவட்ட பாஜகவின் 15 மண்டலங்களிலும் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாகமாக கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், பட்டாசுகள் வெடித்தும் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை விமரிசையாக கொண்டாடினர்.

இதன் ஒரு பகுதியாக, தூத்துக்குடி அருள்மிகு பாகம்பிரியாள் சமேத சங்கர ராமேஸ்வரர் திருக்கோவிலில், பிரதமர் நரேந்திர மோடி நீண்ட ஆயுளுடனும், நல்ல ஆரோக்கியத்துடனும் தொடர்ந்து நாட்டிற்கு சேவை செய்ய வேண்டி சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, வடக்கு ரத வீதியில் பட்டாசுகள் வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.எம். ராஜேஷ், மாநில செயற்குழு உறுப்பினர் விவேகம் ரமேஷ், கிழக்கு மண்டலத் தலைவர் சண்முகசுந்தரம், ஓபிசி மாநில செயற்குழு உறுப்பினர் பாலமுருகன், வணிகப் பிரிவு மாவட்டத் தலைவர் செந்தில், ஓபிசி மாவட்ட பொதுச் செயலாளர் வன்னியராஜ், மாவட்டத் துணைத் தலைவர் காளிராஜா, அணிப் பிரிவு மாவட்டத் தலைவர்கள் ஓம் பிரபு, ஜெயக்குமார், உஷாதேவி வினோத், மண்டலப் பொறுப்பாளர்கள் ஜெயரூபி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# கோவையில் முதன்முறையாக கார் கண்காட்சி

## கோவையில் ஆனமலைஸ் டொயோட்டா சார்பில் அடுத்த தலைமுறை வாகனக் கண்காட்சி கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு கண்காட்சியை ரசித்தனர்




கோவை மேட்டுப்பாளையம் சாலை சாய்பாபாகாலனி பகுதியில் உள்ள ஆனமலைஸ் டொயோட்டா விற்பனை மையத்தில் , அடுத்த தலைமுறை வாகனங்கள் மற்றும் நவீன வாகனத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் வகையில் சிறப்பு வாகனக் கண்காட்சி செப்டம்பர் 18, 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் மூன்று நாட்கள் நடைபெறுகிறது.

இந்நிலையில் இதற்கான துவக்க விழாவில் சிறப்பு விருந்தினராக ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயா ஸ்ரீ திவ்ய நாமானந்தா சாமிகள் கலந்து கொண்டு கண்காட்சியை துவக்கி வைத்தார்..

நிகழ்ச்சியில் கோவை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் விஸ்வநாதன்,ஆனமலைஸ் குழுமங்களின் சி தலைவர் காளிச்சாமி,.இ.ஒ.யுவராஜன்,விற்பனை பிரிவு துணைதலைவர்சிவராமன், முதன்மை வர்த்தக அதிகாரி கண்ணன், ராமகிருஷ்ணா வித்யாலாய தொழில் பயிற்சி மையத்தின் முதல்வர் முரளி,மற்றும் முன்னால் டீன் மரகதம் நடராஜன் ஆகியோர் உடனிருந்தனர்..

இந்தக் கண்காட்சியில் டொயோட்டா நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட கலப்பின வாகனத் தொழில்நுட்பம் மற்றும் எதிர்கால வாகனத் தொழில்நுட்பங்களை பொதுமக்கள் நேரில் பார்வையிட்டு அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், டொயோட்டா நிறுவனத்தின் பல்வேறு வகையான வாகனங்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன், வாகனங்களை ஓட்டிப் பார்க்கும்வசதி,சிறப்பு சலுகைகள் , குடும்பத்தினருக்கானபொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்களும் இடம்பெற்று ள்ளன..

கண்காட்சியின் ஒரு பகுதியாக கல்லூரி மாணவர்களுக்காக ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கும் நிகழ்வும், 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு எதிர்கால கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்து வழிகாட்டும் நிகழ்வும் நடைபெறுகிறது.

செப்டம்பர் 18, 19 மற்றும் 20 ஆகிய மூன்று நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை கண்காட்சி நடைபெறும் எனவும் கண்காட்சியை காண விரும்புவோர், முன்பதிவு செய்வது கட்டாயம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கோவை கருமத்தம்பட்டியில் உள்ள பார்க் கல்வி குழும வளாகத்தில்

# முதலாம் ஆண்டு பொறியியல் மாணவர்களுக்கான “ஸ்பார்க் 2026” ஓரியண்டேஷன் மற்றும் ஃப்ரெஷர்ஸ் தின விழா நடைபெற்றது




பார்க் கல்வி குழுமத்தின் மூன்று பொறியியல் கல்லூரிகள் மற்றும் தமிழ்நாடு கட்டிடக்கலைக் கல்லூரியில் சேர்ந்துள்ள 1,243 முதலாம் ஆண்டு மாணவர்கள் விழாவில் பங்கேற்றனர். பிரேமா ரவி ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற விழா, பார்க் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஆலன் ஜோஷ்வா மற்றும் கெவின் ஜோ இசையமைத்த செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட இறை வணக்கப் பாடலுடன் தொடங்கியது.

தொடர்ந்து, தலைமை விருந்தினர் ஈரோடு மகேஷ், பார்க் கல்வி குழும தலைவர் டாக்டர் பி.வி. ரவி, தலைமைச் செயல் அதிகாரி டாக்டர் அனுஷா ரவி உள்ளிட்டோர் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தனர்.

விழாவில் பேசிய டாக்டர் அனுஷா ரவி, மாணவர்கள் ஒழுக்கம், கல்வி மற்றும் பணித்திறன்களை வளர்த்துக்கொண்டு பெற்றோர்களை பெருமைப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபாட்டிக்ஸ் துறைகளில் உருவாகி வரும் வாய்ப்புகளை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். பார்க் கல்வி குழும தலைவர் டாக்டர் பி.வி. ரவி, மாணவர்கள் பெரிய கனவுகளைக் கண்டு, கல்வியை மதித்து தங்களது எதிர்காலத்திற்கான பொறுப்பை ஏற்கவேண்டும் என கேட்டுக்கொண்டார். செயற்கை நுண்ணறிவு யுகத்தில் படைப்பாற்றல், புதுமை மற்றும் தொடர்ச்சியான கற்றல் முக்கியம் என்றும் தெரிவித்தார்.

தலைமை விருந்தினர் ஈரோடு மகேஷ், மாணவர்கள் தன்னம்பிக்கை, ஒழுக்கம், சிக்கல் தீர்க்கும் திறன், தெளிவான சிந்தனை மற்றும் தகவல் தொடர்புத் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், மற்றவர்களுடன் தங்களை ஒப்பிடாமல், தங்களது தனித்துவமான திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். விழாவில், மாணவர்கள் தங்களது எதிர்கால சுயத்திற்கு கடிதம் எழுதும் புதுமையான நிகழ்வும் நடைபெற்றது. இதில் முதலாம் ஆண்டு தகவல்தொழில்நுட்ப மாணவி ஶ்ரீ சரண்யா எழுதிய கவிதை பார்வையாளர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது.

மேலும், பார்க் கல்வி குழுமத்தில் சேர்ந்த முதல் 10 மாணவர்களுக்கு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் வடிவமைக்கப்பட்ட அவர்களது AI புகைப்படங்கள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டன.

பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் நிர்வாகிகள் விழாவில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். பார்க் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் டாக்டர் குமரேசன் நன்றி தெரிவித்தார்.



## வானில் கருடன் வட்டமிட... தேனி சொக்கதேவன்பட்டியில் வெகுவிமர்சையாக நடந்த மகா கும்பாபிஷேகம்

தேனி மாவட்டம் சொக்கதேவன்பட்டியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு அங்காளபரமேஸ்வரி ஆலய மகா கும்பாபிஷேக விழா வெகுவிமர்சையாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தின் போது வானில் கழுகு வட்டமிட்ட அற்புதம் நிகழ்ந்த நிலையில், இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

தேனி மாவட்டம், சொக்கதேவன்பட்டிவை கைக்கரை மேற்கு கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி ஆலயம் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு ஜீவஜீர்ணோத்தான அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

முன்னதாக, கடந்த செப்டம்பர் 16-ஆம் தேதி விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கி, முதல்காலம் மற்றும் இரண்டாம் கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. யாகசாலையில் 108 மூலிகை பூர்ணாஹுதி, திரவியாஹுதி மற்றும் மகா தீபாராதனைகள் வேத விற்பன்னர்கள் மந்திரங்கள் முழங்கச் சிறப்பாக நடத்தப்பட்டன. தொடர்ந்து மூன்றாம் கால யாகசாலை பூஜைகள் நிறைவடைந்ததை அடுத்து, கடங்கள் புறப்பாடு நடைபெற்றது. காலை 9.36 மணிக்கு ஶ்ரீ விநாயகர் மற்றும் ஶ்ரீ விமான மகா கும்பாபிஷேகமும், அதனைத் தொடர்ந்து அருள்மிகு அங்காளபரமேஸ்வரி அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களின் கலசங்களுக்குப் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் வெகுவிமர்சையாக நடைபெற்றது. கும்பாபிஷேகம் நடைபெற்ற அந்தச் சுபவேளையில், ஆலயத்தின் மேலே கருடன் எனப்படும் கழுகு வானத்தில் வட்டமிட்டுச் சென்ற அற்புதம் நிகழ்ந்தது. இதைக் கண்ட பக்தர்கள் பரவசமடைந்து பக்தி பாடல்களை பாடி கோஷங்களை எழுப்பினர். பின்னர் மூலஸ்தான தெய்வங்களுக்குச் சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்கார தீபாராதனைகள் காட்டப்பட்டு பக்தர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கப்பட்டது. இவ்விழாவில் சொக்கதேவன்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவையொட்டி வருகை தந்த பக்தர்கள் அனைவருக்கும் பிரம்மாண்டமான முறையில் அன்னதானமும் வழங்கப்பட்டது.

## நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களுக்கு ஆட்சியர் வாழ்த்து



தமிழக அரசின் டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது பெற்ற இராணிப்பேட்டை மாவட்ட தொடக்கக் கல்வித்துறையைச் சேர்ந்த ஆசிரியர்கள் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இராணிப்பேட்டை மாவட்டத்தில் தொடக்கக் கல்வித்துறையில் தமிழக அரசின் உயரிய விருதான டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதுக்கு தேர்வான பா.பாலமுருகன், த. அன்பரசி, பெ. தேன்மொழி மற்றும் க. ஞானசேகரன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மதிப்புமிகு திருமதி ந. பிரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்தனர்.

அப்போது, விருது பெற்ற ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், கல்விப் பணியில் மேலும் சிறந்து விளங்க வாழ்த்தினார்.

இந்நிகழ்வின்போது இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி ம. மோகனா உடனிருந்தார்.

நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களுக்கு கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் பலரும் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

## மதுராந்தகம் அருகே அதிமுக சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் ரெட்டைமலை சீனிவாசன் நினைவு தினத்தையொட்டி மாலை அணிவிப்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த கோழியாளம் கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரரும் வட்டமேசை மாநாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்து வருமான திவான் பகதூர் ரெட்டமலை சீனிவாசன் அவர்களின் நினைவு தினத்தில்

அதிமுக துணை பொதுச் செயலாளர் கேபி முனுசாமி மற்றும், அதனால்தான் சட்டமன்றத்தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் கணிதா சம்பத் அவர்களும் ரெட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த ஊரான கோழியாளம் கிராமத்தில் அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும் மலர் தூவியம் நினைவு அஞ்சலி செலுத்தினர்

அப்போது பேசிய கேபி முனுசாமி சுதந்திரப் போராட்ட வீரரும் தமிழ் மக்களுக்காகவும் இந்திய மக்களுக்காகவும் வெள்ளையனை எதிர்த்துப் போராடிய முன்னணி தலைவர்களில் இரட்டைமலை சீனிவாசனும் ஒருவர்

வட்டமேசை மாநாட்டில் டாக்டர் புரட்சியாளர் அம்பேத்கர் உடன் சேர்ந்து மாநாட்டில் பங்கு பெற்றவர் ஆதிதிராவிடர் சமூகத்திற்கு தனி தொகுதி வழங்க வேண்டுமெனவும், அவர்களுக்கு அரசு பணிகள் வழங்க வேண்டும் எனவும் குரல் கொடுத்தவர்

இப்படி வாழ்நாள் முழுவதும் சமூகத்திற்காகவும் அன்று சிறைப்பட்டிருந்த நாட்டு மக்களுக்காகவும் போராடிய ஒரு சுதந்திர தியாகி அவருடைய 81 வது ஆண்டு நினைவு தினத்தில் அவரை நினைவு கூறுவது அனைத்திந்திய அண்ணா திராவிட கழகத்தின் கடமையாகும் எனக் கூறினார்

மேலும் தாராபுரம் தொகுதி மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது நினைவை அனுஷ்டிகின்ற இடத்தில் அரசியல் வேண்டாம் எனக் குறிச் சென்றார். இந்நிகழ்ச்சியில் செங்கை கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்ற எஸ் ஆறுமுகம், அதிமுக சட்டமன்ற கொரடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி. முன்னாள் அமைச்சர் சோமசுந்தரம், வாலாஜாபாத் கணேசன், அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் பெரும்பாக்கம் விவேகானந்தன் உள்ளிட்ட அதிமுக கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



தந்தை பெரியாரின் 148வது பிறந்தநாளை முன்னிட்டு, ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாநகர மாவட்டச் செயலாளர் அ. தமிழ்க்குமரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாவட்டத் தலைவர் கு. சேகர் மற்றும் நிர்வாகிகள் சுந்தரமூர்த்தி, நெடுமாறன், கோட்டை தங்கராஜ், சூளை செந்தில்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம்

### கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்: இது குறித்து மேலும் தெரிவித்துள்ளது, ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் கூட்டம் 22.09.2026 (செவ்வாய் ) அன்று காலை 11.00 மணிக்கு மாவட்ட ஆட்சியரக குறைதீர்க்கும் கூட்ட அரங்கில் (GDP Hall) நடைபெற உள்ளது. இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களில் இணைய வழி மூலம் விண்ணப்பிக்கவேண்டிய இனங்களை கட்டாயம் இணையவழி மூலம் மட்டுமே விண்ணப்பிக்கப்பட வேண்டும். இதர கோரிக்கைகளை எழுத்துப்பூர்வமான மனுக்களாக (Offline Petition) வழங்கி பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

## போலி இணையதளம் மூலம் ரூ.23 லட்சம் மோசடி; பெண் வங்கி ஊழியர் கைது

சென்னையில் போலி இணையதளம் மூலம் ரூ.23 லட்சம் மோசடி செய்த பெண் வங்கி ஊழியரை போலீசார் கைது செய்துள்ளனர்.

அதிக வட்டிக்கு முதலீடு



சென்னையை சேர்ந்த ஹேமா பிரியதர்ஷினி (வயது 40) என்பவருக்கு, கடந்த 2024-ம் ஆண்டு அவரது உறவினர் மூலம் பூஜா ஜெயின்(வயது 39) என்றபெண் அறிமுகமானார். தனியார் வங்கிகளில் ரிலேஷன்ஷிப் மேனேஜராக பணியாற்றி வந்த பூஜா ஜெயின், 'ஐ.பி.எல். பண்ட்' என்ற திட்டத்தில் பணத்தை முதலீடு செய்தால் 30 சதவீதம் அதிக வட்டி கிடைக்கும் என்று பிரியதர்ஷினியிடம் ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

இதனை நம்பி ரூ.15 லட்சம் பணத்தை ஹேமா பிரியதர்ஷினி முதலீடு செய்தார். அந்த பணத்திற்கு வட்டி தொகையும் கிடைத்துள்ளது. சில மாதங்களுக்குப் பிறகு, மேலும் பணத்தை முதலீடு செய்யுமாறு ஹேமா பிரியதர்ஷினியிடம் பூஜா ஜெயின் வற்புறுத்தியுள்ளார். இதையடுத்து கடந்த 2025-ம் ஆண்டு ஆண்டு மார்ச் மாதம் ரூ.8 லட்சம் பணத்தை ஹேமா முதலீடு செய்தார். ஆனால் இந்த முறை வட்டி பணம் எதுவும் அவருக்கு வரவில்லை. இதையடுத்து, சென்னை பார்க் டவுன், மின்ட் தெருவைச் சேர்ந்த பூஜா ஜெயினை போலீசார் கைது செய்தனர். அவரிடமிருந்து மோசடிக்கு பயன்படுத்தப் பட்ட 2 செல்போன்கள் மற்றும் ஒரு லேப்டாப் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. கைதான பூஜா ஜெயின் மீது ஏற்கனவே நுங்கம்பாக்கம், கொளத்தூர் காவல்நிலையங்கள் மற்றும் சென்னை மத்திய குற்றப்பிரிவில் மோசடி வழக்குகள் நிலுவையில் இருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்த போலீசார், இந்த வழக்கில் தொடர்புடைய மற்ற நபர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பெரியார் சிலைக்கு திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை



தந்தை பெரியாரின் பிறந்த நாளை முன்னிட்டு, ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் முழு உருவச் சிலைக்கு, ஈரோடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முன்னாள் அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான சு. முத்துச்சாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகர செயலாளர் சுப்பிரமணியம், திண்டல் குமாரசாமி, தெற்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் ஜெ.திருவாசகம், பகுதி செயலாளர்கள் சூரியம்பாளையம் குமரவேல், வி.சி.நடராஜன், அக்னி சந்துரு, மண்டலத் தலைவர் பி.கே. பழனிசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாய பெருமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (18.09.2026) பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# ‘விழித்திரை காப்போம்’... பார்வையை பாதுகாக்க தமிழக அரசின் புதிய திட்டம்!

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் கோ. க. அருண்ராஜ் (18.09.2016) சென்னை



மண்டல கண் மருத்துவமனையில் விழித்திரை காப்போம்திட்டம்குறித்த முன் வெளியீட்டு நிகழ்வை தொடங்கி வைத்தார். இது தொடர்பாக வெளியாகியுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தொடர்ந்து இம்மருத்துவமனையில் விழித்திரை அறுவை சிகிச்சை மேற்கொண்ட மருத்துவ பயனாளிகளிடம் சிகிச்சை குறித்து அமைச்சர் கேட்டறிந்தார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்ததாவது,

விழித்திரை காப்போம் திட்டம் இன்றைய தினம் தமிழ்நாடு முதலமை ச்சரின் வழிகாட்டுதலின்படி, எழும்பூரில் உள்ள மண்டல கண் மருத்துவமனையில் விழித்திரை காப்போம் திட்டம் என்ற நாட்டிலேயே ஒரு முன்னோடி திட்டத்திற்கான முன் வெளியீட்டு நிகழ்வு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**உயர் சிறப்பு சிகிச்சை**

இத்திட்டத்தின் நோக்கம் ஆண்டுக்கு ஒருமுறை 30 வயதிற்கு மேற்பட்ட நபர்கள் மற்றும் சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு போன்ற நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விழித்திரை பரிசோதனை மேற்கொண்டு, ஆரம்ப நிலையிலேயே விழித்திரை மற்றும் பார்வையை பாதிக்கக்கூடிய நோயைக் கண்டறிந்து, அதற்குத் தேவையான உயர் சிறப்பு சிகிச்சை வழங்கவழிவகைசெய்ய வேண்டும் என்பதுதான்.

இத்திட்டம்தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்,37மாவட்ட தலைமை மருத்துவமனைகள், 150 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு பொது மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த மண்டல கண் மருத்துவமனை ஒட்டுமொத்த திட்டத்திற்கும் ஒரு தலைமையாக செயல்படும். இதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவு, அதற்கான பயிற்சி மற்றும் மருத்துவ உபகரணங்கள் அனைத்தையும் வழங்குவதில் இந்த மண்டல கண் மருத்துவமனை முக்கிய பங்கு வகிக்கும். இத்திட்டம் பொதுமக்களை பார்வை பாதிக்கக்கூடிய நோயிலிருந்து பாதுகாக்க உதவும் என மருத்துவம் மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் கோ. க. அருண்ராஜ் தெரிவித்தார்.தொடர்ந்து மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, நேற்றைய முன்தினம் 4 அரசாணைகள் மருத்துவத்துறையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் நடந்து முடிந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் 110 விதியின் கீழ் பல முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

அதில் புதிய 7 அரசு செவிலியர் கல்லூரிகள் மற்றும் ஏற்கனவே உள்ள செவிலியர் கல்லூரிகளில் கூடுதல் மாணாக்கர் இடங்கள் மற்றும் 12 துணை மருத்துவப் படிப்புகளில் 2,788 மாணாக்கர் இடங்கள், மருந்தியல் (Pharmacy) படிப்புகளில் 735 கூடுதல் இடங்கள் என மொத்தம் 6,000-க்கும் மேற்பட்ட கூடுதல் மாணாக்கர் இடங்கள் உருவாக்கப்படும்என்றுமுதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது. இதை உடனடியாக செயல்படுத்தும் விதமாக மருத்துவத்துறையின் சார்பில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இதற்கான அரசாணையை வெளியிடப்பட்டுள்ளது. 16.09.2026 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண் 261-ன் படி, திருநெல்வேலி, திருச்சி,தர்மபுரி,வேலூர், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.270.26 கோடி செலவில் புதிய செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்பட உள்ளது.

**கூடுதல் மாணாக்கர் இடங்கள்**

அரசாணை எண் 262-ன் படி, கோயம்புத்தூர் ESI மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 60 இடங்கள் கொண்ட செவிலியர் கல்லூரி மற்றும் ஏற்கனவே உள்ள அரசு செவிலியர் கல்லூரிகளில் டிப்ளமோ நர்சிங் (Diploma in Nursing) படிப்பிற்கு 1,290 கூடுதல் இடங்கள் உருவாக்கப்படும். B.Sc. நர்சிங் படிப்பிற்கு 440 கூடுதல் இடங்கள், M.Sc. நர்சிங் படிப்பிற்கு 75 கூடுதல் இடங்கள் மற்றும் Post Basic B.Sc. நர்சிங் படிப்பிற்கு 120 கூடுதல் மாணாக்கர் இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 263-ன் படி, B.Pharm படிப்பிற்கு 600 கூடுதல் மாணாக்கர் இடங்களை உருவாக்கப்பட்டுள்ளது.







# ஈரோட்டில் இந்து முன்னணி சார்பில் ஸ்ரீ விநாயகர் விசர்ஜன ஊர்வலம்

ஈரோடு மாநகர் சம்பத் நகர் பகுதியில் இந்து முன்னணி சார்பில் நடைபெற்ற ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி விழாவின் நிறைவு நிகழ்வாக, ஸ்ரீ விநாயகர் விசர்ஜன ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலத்திற்கு இந்து முன்னணி மாவட்டத் தலைவர் ப. ஜெகதீசன் தலைமை வகித்தார். மாவட்ட பொதுச்செயலாளர் க. கார்த்தி, மாவட்டப் பொருளாளர் ச. கோவிந்தராஜ், மாநில துணைத்தலைவர் நா. சண்முகசுந்தரம், மாநில செயற்குழு உறுப்பினர் சு. விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலைவகித்தனர்.

ஊர்வலத்தை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநில துணைத்தலைவர் சேவா ரத்னா டாக்டர் நா. நந்தகோபால், காவிக்கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

சம்பத் நகரில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் முனிசிபல்காலனி,மேட்டூர்சாலை,மீனாட்சிசுந்தரனார் சாலை, ஈஸ்வரன் கோயில் வீதி, மணிக்கூண்டு, கருங்கல்பாளையம் வழியாக காவிரி கரையை சென்றடைந்தது. இதில் 169 வாகனங்களில் விநாயகர் சிலைகள் எடுத்துச் செல்லப்பட்டு, காவிரி கரையில் விசர்ஜனம் செய்யப்பட்டது.

நிகழ்வில் இந்து முன்னணி மாவட்டச் செயலாளர்கள் பொ. சங்கர், து. முரளி, ப. ரமேஷ், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கு.சதீஷ்வேல், கே.பி. சின்னுச்சாமி, அ. சண்முகம், க. கவின், ர. சுதாகர், ஏ. சண்முகம் உள்ளிட்ட நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி நேற்று (18.09.2026) பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

# Delhi HC issues show cause notices to 140 candidates over DUSU poll violations

*The Delhi High Court on Friday issued show-cause notices (SCN) to 140 candidates contesting the Delhi University Student Union (DUSU) elections and student organisations including Akhil Bharatiya Vidyarthi Parishad (ABVP) and National Students' Union of India (NSUI), asking why exemplary electoral damages should not be imposed on them for alleged frequent violations of the guidelines governing the polls.*

*A bench of Chief Justice DK Upadhyaya and Justice Tejas Karia said that the measures undertaken by Delhi University and the Delhi Police from time to time did not appear to be acting as an effective deterrent, as instances of alleged hooliganism and other illegal activities amounting to offences in and around the campus had continued unabated.*

*The court observed that reports of students brandishing weapons, taking out cavalcades of luxury cars and a candidate allegedly slapping a teacher after winning the elections were alarming. It said such cavalcades created an atmosphere of fear, terror and hegemony on the campus.*



*It further barred the winning candidates from taking out victory processions not only on the roads of the city but also on the campus and hostel.*

*"They're not students. Someone brandishing weapons- is he a student? Roaming around in a cavalcade of luxury cars. These student organisations, I don't know what they are doing. A lot needs to be done. These cavalcades create a sense of fear, terror, and hegemony. The candidates are standing on the roof of the car and on the front bonnet. What else is hooliganism? What can be more alarming than all this? In the capital city of our nation. What do you say to this? You people have not mended your ways. We will not accept apologies. It's only that the court has been lenient; one candidate slapped a teacher after winning elections..." the bench said.*

*In its order, it said, "So far as the status report by the Delhi University is concerned, what we notice is that in certain reported cases SCN have been issued; however, even such action administratively taken by DU and also, the action taken by Delhi Police do not appear to be working as a deterrent to those who have been indulging in all kinds of hooliganism in and around the campus but also in certain illegal activities amounting to commission of crime has not abated. There cannot be any doubt on any count that frequent and brazen violation of Lyngdoh Committee recommendations is occurring. The situation which has arisen needs to be checked by all means."*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.